C.C.// 140 /2016

PW – 7

பெயர்: சிபின் ராஜ்மோன்

தேதி: 12.05.2026.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (Through VC)

புகார் மனு யாருடைய தகவலின் பெயரில் எனது புலன் விசாரணையில் பெறப்பட்டது என்றால் தலைமைக்காவலர் 2019, கமலக்கண்ணன் என்பவர் மூலம் பெறப்பட்டது. அந்த புகார்மனு புகார்தாரர் மூலமாக எழுதப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. புகார் பெறும் போது அத்தாட்சி சாட்சி யாரும் பக்கத்தில் இருந்தார்களா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்ற நேரத்தை எந்த ஆவணத்தில் பதிவு செய்தேன் என்றால் பார்வை மகஜரில் பதிவு செய்தேன். சம்பவ இடத்தில் பொது மக்கள் இருந்த போது ஏன் மற்ற சாட்சிகளை பார்வை மகஜரில் சேர்க்கவில்லை என்றால் அவர்கள் சாட்சி கூற முன்வராததால் சாட்சியம் அளிக்க முன்வந்தவர்கள் மூலம் கையெழுத்து வாங்கினேன். அந்த சம்பவ இடத்தை போட்டோ எடுத்தேனா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் இரத்தக்கறை அல்லது ஆயுதம் போன்றவற்றை கைபபற்றினேனா என்றால் இல்லை. குற்றத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் அரிவாள் கைப்பற்றினேனா என்றால் இல்லை.

அரிவாளை கைப்பற்றாததற்கு காரணம் என்னவென்றால் எதிரியை கைது செய்த போது அவரிடம் விசாரிக்கையில் எதிரி ஆயுதத்தை மறைத்து வைத்த இடத்தை கூறவில்லை. அதனால் கைப்பற்ற இயலவில்லை. ஆயுதத்தை கைப்பற்றாமல் எவ்வாறு குற்றத்தை முடிவு செய்தேன் என்றால் சாட்சிகள் விசாரணையிலிருந்தும், காயப்பட்ட நபரின் வாக்குமூலத்திலிருந்தும் மற்றும் ரகசிய விசாரணையின் மூலம் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். மருத்துவர் கொடுத்த சான்றிதழில் சாதாரண காயம் என சொல்லி உள்ளார். அந்த காயம் அரிவாளால் ஏற்பட்டது என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் விபத்து பதிவேட்டில்அரிவாள் என்று பதிவு இருந்ததால் எனது விசாரணையில் மருத்துவர் அவ்வாறு குறிப்பிட்டார்.

எதிரியை கைது செய்யும் போது சாட்சிகள் இருந்தார்களா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. ஆனால் கைது விவரம் எதிரியின் உறவினர்களுக்கு தெரியபடுத்தப்பட்டது. கைது செய்த நேரத்தை உறுதிப்படுத்த எந்த ஆவணம் உள்ளது என்றால் கைதி குறிப்பாணை, Arrest card, Remand report ல் குறிப்பிட்டுள்ளது. எனது விசாரணையில் யாருக்கு காயம் ஏற்பட்டதாக துலங்குகிறது என்றால் பிரகாஷ் என்பவருக்கு காயம் ஏற்பட்டதாக துலங்குகிறது.

எனது விசாரணையில் அசா.2 சரவணனை தாக்க முயன்றதாக துலங்குகிறதா என்றால் துலங்குகிறது. தாக்க முயன்ற போது அசா.1 அதை தடுத்த போது அசா.1 க்கு வெட்டு காயம் ஏற்பட்டது.இது சம்பந்தமாக சிசிடிவி பதிவுகள் சேகரித்தேனா என்றால் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் அப்போது இருந்ததாலும் சிசிடிவி சம்பவ இடத்தின் அருகே இல்லாததாலும் சேகரிக்க முடியவில்லை.

நேரில் பார்த்தவர்களை தவிர சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ரெஸ்டாரெண்ட் உரிமையாளர் மற்றும் அங்கு வேலை பார்க்கும் நபர்களை விசாரித்தேனா என்றால் ரெஸ்டாரெண்ட் முன்பு சம்பவம் நடைபெற்றது. ஆனால் பல நாட்களாக ரெஸ்டாரெண்ட் மூடி இருந்தது. அதற்கான புகைப்படங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தனிப்பட்ட ரகசிய விசாரணை செய்ததாக சொல்லி உள்ளதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ரகசிய விசாரணையில் விசாரிக்கும் நபர்களின் விவரங்களை பொதுவாக ஆவணங்களில் குறிப்பிடுவதில்லை. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்த விசாரணையும் செய்யவில்லை என்றாலும் பார்வை மகஜர், வரைபடம் எதுவும் தயாரிக்கவில்லை என்றாலும் உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க குற்ற இறுதி அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi